RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22474

OPEN ACCESS

# தமிழ்ஒளி கவிதைகளில் பொதுவுடைமைச் சிந்தனை

க. சேகர் [அ, *]

[அ] தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி, சென்னை-600005, தமிழ்நாடு, இந்தியா

# Communist Thoughts in Tamiloli Poetry

G. Sekar [a, *]

[a] Department of Tamil, Presidency College, (Autonomous) Chepauk, Chennai-600005, Tamil Nadu, India

* Corresponding Author: ganesansekar68@gmail.com

Received: 12-07-2022
Revised: 27-09-2022
Accepted: 01-10-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

Poet Tamiloli is a revolutionary thinker. He is the breath of Tamil nationalism and communist ideology. He was born in 1924. He wrote his works in poetry, essays, epics, short stories and dramas. The Tamil community was happy to say that Poet Tamiloli was a student of Bharathidasan and a hereditary poet of Bharathidasan. Just as Bharathidasan expressed economic equality in his poems, Tamiloli also expressed communist thought throughout his work. The reader of his work will be tempted to think that economic equality must be achieved in this country. His works shone to such an extent that it can be said that Tamil Oli means a communist poet. This will be discussed in detail in this article.

**Keywords:** Poet Tamiloli, Communist Thoughts, Tamil community, Economic Equality

## முன்னுரை

கவிஞர் தமிழ்ஒளி புரட்சி சிந்தனைமிக்க ஒரு படைப்பாளர். தமிழ்த் தேசியத்தையும், பொதுவுடைமை சித்தாந்தத்தையும் உயிர் மூச்சாகக் கொண்டவர். 1924 ஆம் ஆண்டில் பிறந்தவர். தம் படைப்புகளை கவிதை, கட்டுரை, காப்பியம், சிறுகதை, நாடகம் என்று அத்துணை இலக்கிய வகைமைகளிலும் திறம்பட எழுதியவர்.

இவரை "பட்டொளிவீசிப் பாடிப்பறந்த பாவாணர்" என்று கனகசுந்தரமும், "தமிழ்வானத்தில் விளங்கிய ஒரு விண்மீன்" என்று மு. வரதராசனாரும், "பொதுவுடைமைப் போர்க்களத்தில் களப்போர் வீரக்கவிஞனார்" என்று பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையும், "தமிழ் ஒளியின் கவிதைகளில் பலவற்றையும் புதிய அழகுமலர்கள் என்று பாராட்டலாம்" என்று பி.ஸ்ரீயும், "கவிஞரின் கவிதைகளில் கற்பனைச் செறிவும் உணர்ச்சித் துடிப்பும், ஆழ்ந்த கருத்துகளின் ஒளியும், பல்வேறு சந்தங்களின் வனப்பும் கோயில் கொண்டுள்ளன"என்று பேராசிரியர் ரா.ஸ்ரீ.தேசிகனும் வியந்து எழுதியுள்ளனர். மேலும், கவிஞர் தமிழ்ஒளியைப் பாரதிதாசனின் மாணவன் என்றும் பாரதிதாசனின் பரம்பரைக் கவிஞர் என்றும் தமிழ்ச்சமூகம் சொல்லி மகிழ்ந்தது. பொருளாதாரச் சமத்துவத்தைக் கவிதைதோறும் பாரதிதாசன் வெளிப்படுத்தியது போன்று தமிழ்ஒளியும் தம் படைப்பு முழுவதும் பொதுவுடைமைச் சிந்தனையை வெளிக் கொணர்ந்தார். பொருளாதாரச் சமத்துவம் இந்த நாட்டில் எய்திட வேண்டும் என்பதை அவரது படைப்பை வாசிப்பவர்க்கு எண்ணிடத் தோன்றும். தமிழ்ஒளி

என்றால் பொதுவுடைமைக் கவிஞர் என்று சொல்லுகிற அளவுக்கு அவருடைய படைப்புகள் மிளிர்ந்தன. இதனையே இக்கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

## இதழாளர் - தமிழ்ஒளி

கவிஞர் தமிழ்ஒளி 'முன்னணி' இதழுக்கு துணையாசிரியராகவும் சிலகாலம் இருந்து வந்தார். அப்பொழுது ஏகாதிபத்திய காலனி நாடுகளில் பாட்டாளி வர்க்கம் நடத்திய போராட்ட நிகழ்வுகளை அந்த இதழில் விரிவாக எழுதிவந்தார். பிறகு அந்த இதழ் ஓராண்டிலேயே நின்றுவிட 'ஜனநாயகம், என்ற இதழைத் தன்னுடைய சொந்த பொறுப்பில் நடத்தினார். இந்த இதழும் மார்க்சிய தத்துவத்தை வெளியிடக்கூடிய இதழாக அப்பொழுது வெளிவந்தது. இந்த இதழைப் பற்றி செ.து.சஞ்சீவி "மார்க்சிஸ்ட் தத்துவத்தை விளக்குவதற்கென்றே அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் மாத சஞ்சிகை தமிழில் வெளிவருவது மிகவும் பொருத்தமானது. மகிழ்ச்சிதரும் செய்தி. அவசரத் தேவையைப் பூர்த்தி செய்யும் ஆயுதம்"என்று பெருமைப்பட எழுதியுள்ளார்.

## முற்போக்குச் சிந்தனை

கவிஞர் தமிழ்ஒளி தம்முடைய காலத்தில் நடைபெற்ற தொழிலாளர் போராட்டங்களையும் கவிதையின் வழியே பதிவுசெய்தவர். நாள்தோறும் செங்கொடி ஏந்தி ஊர்வலமாகச் செல்லும் தொழிலாளர்களைக் கண்டு உணர்ச்சி வசப்பட்டார். பஞ்சாலைத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், துறைமுகத் தொழிலாளர்கள், கள் இறக்கும் தொழிலாளர்கள், கைரிக்ஷா தொழிலாளர்கள் எனப் பலவிதமான தொழிலாளர்களும் படும் இன்னல்களைத் தம் படைப்புகள் வழியே சித்திரித்துக் காட்டியவர். விளிம்புநிலை மக்கள் தமிழகத்தில் பிழைக்க வழியின்றி வேற்று நாடுகளுக்குச் சென்று பல இன்னல்களை அனுபவித்தனர். அப்படி பிழைப்புத்தேடி வேற்று நாடுகளுக்குச் சென்று அடிமைப்பட்ட தமிழர்களின் துன்பவாழ்வைத் தன் கவிதைகளில் பாரதியும், பாரதிதாசனும் பதிவுசெய்தனர். அவர்களின் வழியில் தமிழ்ஒளியும் ஒடுக்கப்பட்ட மக்கள் பிழைப்புத்தேடி ஆப்பிரிக்க நாட்டிற்குச் சென்று அடிமைப்பட்ட அவல நிலையை என்னஇது ஞாலமடா? 'ஏழைகளும் இங்கேதான் வாழ்வதற்குச் சின்னதொரு புகல் உண்டோ? என்ற கேள்வியின் வழி பதிவு செய்துள்ளார். மட்டுமல்லாது முற்போக்குச் சிந்தனையாளரான கவிஞர் தமிழ்ஒளி கடவுள் மறுப்பாளரும் கூட இல்லாத கடவுளுக்கு வீணாகப் பணம் செலவழிப்பதை விட வாழும் மனிதர்க்கு உணவு கொடுப்பது சிறந்தது என்ற எண்ணம் கொண்டவர்.

## பொதுவுடைமைச் சிந்தனை

ஒவ்வொரு படைப்பாளிக்கும் தான் படைக்கப் போகும் படைப்பு குறித்து ஒரு குறிக்கோள் இருக்கும். அந்த வகையில் கவிஞர் தமிழ்ஒளி தன் படைப்பு குறித்து,

"நம் கண்ணெதிரே நம் உடன் பிறந்தான் மாடாக உழைத்து ஓடாகத்தேய்ந்து போகிறான். அவன் குடும்பம் வறுமைப் படுகுழியில் வீழ்ந்து கதறுகிறது. இதைக்கண்டு மனமிரங்காமல் மரத்துப்போன நெஞ்சுடன் உலாவும் மானிடப் பிண்டங்களின் உடலில் 'சுரீர் சுரீர்' என்று தைக்கும்படி எழுதுவதுதான் உண்மை எழுத்தாளனின் கடைமையும் நோக்கமாகும்" என்று குறிப்பிடுகிறார் (Tamil Oli, 2016).

நாடு சுதந்திரம் அடைந்த போது ஆட்சி அதிகாரம் நிலவுடைமையாளர் களிடத்திலும், ஆலை அதிபர்களிடத்திலும் செல்வந்தர்களிடத்திலும் இருந்தது. இப்படிப் பட்டவர்கள் உழைப்பாளி வர்க்கத்தைச் சுரண்டி, பொருளாதார ஒடுக்குதல்களுக்கு உள்ளாக்கினர். இதனைக் கண்ட தமிழ்ஒளியின் மனம் வெதும்பியது.

"தேளனைய முதலாளித்திடர் தம்மைச்

சிரம் கொய்து கர்ஜித்து முரசுகொட்டி

ஆளவந்தோம் உலகத்தை ஏழைமக்கள்

அடி பணியோம் எனச் சொல்லி கொடி உயர்த்து"

என்று உழைப்பாளர்களின் சார்பாகக் குரல் கொடுக்கிறார் (Sanjeevi, 2015).

உழைப்பவன் ஒருவனாகவும் உழைப்பின் பயனை அனுபவிப்பவன் வேறொருவனாகவும் இருக்கிற நிலை ஒழிய வேண்டும் என்பது தமிழ்ஒளியின் கனவாக இருந்தது. அந்தக் கனவுதான் அவருடைய எல்லாப் படைப்புகளிலும் விஞ்சி நிற்கிறது. உழைக்கும் வர்க்கம் உயர வேண்டும்; பொதுவுடைமைத் தழைக்க வேண்டும் என்பது கவிஞரின் தணியாத ஆசை.

"தெருக்களிலே சாக்கடையில் முடைநாற்றத்தில்

திரிகின்ற மனிதரெல்லாம் மணிப்பொன் வீட்டுக்

குருவிகளாய்த் தென்றலிலே மகிழ்ச்சியோடு

குலவுதற்கு மாளிகையை அமைப்போம் வாரீர்"

என்று பாடுவதிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது (Sanjeevi, 2018).

இவர் கவிதை எழுத வந்த 1947 - 48 களில் தமிழ் இலக்கிய உலகில் மரபுசார்ந்த கவிதைகள் மட்டுமே பாடப்பட்டு வந்தது. அந்தக் காலத்தில் இவருடைய கவிதைகள் தமிழ்ச் சமூகத்திற்குப் புதியதாக இருந்தது. புரட்சிகரமான சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இவருடைய படைப்புகள் வெளிவந்தது. தன்னுடைய எழுத்தைப் பற்றி குறிப்பிடும், தமிழ்ஒளி,

"என்கவிதைப் பிரகடனம் உலகமெங்கும்

திமுதிமுவென எழுகின்ற புரட்சிகாட்டும்

சிந்தனைக்கு விருந்தாகும்"

என்கிறார் (Sanjeevi, 2018). பொதுவுடைமைக் கொள்கையைப் பேசவந்த கவிஞர் நாட்டில் ஊர் என்றும், சேரி என்றும் உயர்ந்தவர் என்றும் தாழ்ந்தவர் என்றும் இருக்கக் கூடாது என்கிறார். 'வீராயி' காவியத்தில் வரும் மாரியும் வீராயியும் சாதிக் கொடுமைகளை அனுபவிக்கும்போது நாட்டில் இருப்பதைவிட காட்டிற்குச் சென்று விடலாம் என்று எண்ணுகின்றனர்.

"சேரியெனும் இடமில்லை காட்டினிலே;

அதுவன்றிக் கற்பைத் தின்னும்

பூரியர்கள் அங்கில்லை; சட்டத்தால்

பொய் சொல்லிப் புன்மை சேர்க்கும்

ஆரியர்கள் அங்கில்லை; யாவையுமே

பொதுவுடைமை" (கவிஞர் தமிழ் ஒளி 2016)

முதலாளித்துவம் ஒழிந்தால் நாடு முன்னேறும் என்பது கவிஞர் தமிழ்ஒளியின் திடமான நம்பிக்கை (Tamil Oli, 2016).

"நல்லதொழிலாளர் தம்மை நசுக்கிவரும்

பொல்லா முதலாளி போயொழியும் தேதிவரை

எங்கும் எவருக்கும் எப்போதும் துக்கம்தான்" (Sanjeevi, 2017)

உலகத் தொழிலாளர்களின் உரிமைத் திருநாளான 'மே' தினத்தைப் போற்றிப் பாடிய கவிஞர் தமிழொளி,

"கோழிக்கு முன்னெழுந்து கொத்தடிமைபோல் உழைத்துப்

பாடுபட்ட முகம் பார்த்துப் பதைபதைத்துக்

கண்ணீர் துடைக்க வந்த காலமேநீ வருக!"

என்று 'மே' தினத்தை வரவேற்று கவிதை பாடினார் (Sanjeevi, 2018). இந்தக் கவிதையைப் படித்து வியந்த ஜனசக்தி ஆசிரியர் ஆர்.கே. கண்ணன்,

"நானறிந்தவரை இந்திய மொழிகளில் மேதினம் பற்றி இப்படி ஒரு கவிதை வெளிவந்ததில்லை. தமிழ்ஒளியின் இந்தக் கவிதை ஒரு பொக்கிஷம்" (செ.து. சஞ்சீவி, 2017) என்கிறார்.

இவர் எழுதிய காதல் கவிதையில் கூட உழைப்பாளரின் துன்பம்தான் இவர் சிந்தனையில் இழையோடுகிறது. தன் காதலிக்கு எழுதிய காதல் கடிதத்தில்,

"யாரடி காதலி கேளடி - உன்றன்

ஆசைக்குரியவன் சொல்கிறேன்

பாரடி மானிடச்சாதியை - அவர்

பட்டிடும் துன்பத்தைப் பாரடி!

மாரடித்தேழைகள் மாய்கிறார் - சிலர்

மஞ்சத்தில் உண்டு மேசாய்கிறார்"

என்று எழுதுகிறார் (Sanjeevi, 2018).

பொங்கல் திருநாளைப் போற்றி கவிதை பாடிய கவிஞர் உழவர்களையும், தொழிலாளர்களையும் புகழ்ந்து கவிதை புனைந்துள்ளார்.

"சிங்கஉடல் கொண்டதொழிலாளர் - எட்டுத்

திக்கினிலும் வெற்றிகொளபொங்குகவேபொங்கல்!

தங்குதடை இல்லை இனிமேலே - நம்

தாயகத்தில் பொங்குகவே பொதுவுடைமைப்பாலே"

அரிசியும், பாலும் சேர்த்து பொங்கல் வைக்கிற பானையில் பொதுவுடைமைப் பால் பொங்கவேண்டும் என்று கூறுவது புது சிந்தனையாக வெளிப்படுகிறது. மேலும், தான் ஏற்றுக் கொண்ட பொதுவுடைமைக் கொள்கையைக் கவிதை தோறும் பதிவிட வேண்டும் என்பது கவிஞரின் சிந்தனையாக இருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது (Sanjeevi, 2018).

## அதிகாரத்துக்கு எதிரான குரல்

கவிஞர் தமிழ் ஒளி வாழ்ந்த காலத்தில் பல போராட்டங்கள் உலகம் முழுவதும் நடந்தன. எல்லாப் போராட்டங்களையும் நிகழ்கால சந்ததியினரும், வருங்கால சமூகம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகப் பல போராட்ட நிகழ்வுகளைக் கவிதைகளாக வடித்தவர் தமிழ்ஒளி. 1948இல் குடந்தை நகரில் நகரச்சுத்தி தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டுப் போராட்டம் நடத்த, அந்தப் போராட்டத்தை ஒடுக்க நினைத்த காவல்துறையினர் போராட்டம் நடத்தியவர்களைச் சிறையில் அடைக்கின்றனர். அதனைக் கண்டித்து தொழிலாளர்களின் மனைவிகள் எல்லோரும்

களத்தில் இறங்கி நியாயம் கேட்கின்றனர். களத்தில் நின்று போராடும் பெண் ஒருத்தி காவலர்களைப் பார்த்து

“பட்டினியால் எங்கள் உடல் வரண்டதாலே

பால் வற்றுப் போயிற்று! குழந்தைகட்கும்

ஒட்டியது சிறுவயிறு! ஆதனால் தான்

நாங்களும் போராட வந்தோம்”

என்று கூறுகிறாள் (Sanjeevi, 2018).

சீனநாட்டில் 1948 இல் மாசேதுங் தலைமையில் போராட்டம் நடந்தது. அந்தப் போராட்டத்தைக் கேள்வியுற்று அதனை ஆதரிக்கும் விதத்தில்,

“ஓ ஓ என்று ஆர்ப்பரித்தே எழுந்தது பார் ஊழிப்போர்! உலகமெங்கும்

ஆஆ என்றதிசயிக்க ஆசிரியத்தாய் மனங்குளிர அடிமைக்கோட்டைக்

காவலர்கள் தலைமீதில் சாவரக்கன் அடிவைத்துக் களைக்கூத்தாட

கோவேந்தர், குலம் நடுங்க குடிமக்கள் கொதித்தெழுந்தார் சீனநாட்டில்”

என்று கவிதை பாடினார் (Sanjeevi, 2018).

ருஷ்ய நாட்டில் சோசலிசம் உருவானதை அறிந்த தமிழ்ஒளி அதனை ஆதரித்து அது போன்ற ஒரு அமைப்பு இங்கும் உருவாக வேண்டும் என்று எண்ணி,

“உருசியர்கள் வாழ்நாட்டில் யாவரும் தான்

ஒன்றென்று கூறுகிறார்; எல்லோருக்கும்

பெருகுதொழில் கட்டாயக்கல்வி உண்டு

பெருஞ்செல்வர் வறியர் எனும் பேச்சே இல்லை”

கவிதை பாடுகிறார் (Sanjeevi, 2017).

பொதுவுடைமைச் சித்தாந்தத்திற்கு எதிராக அவருடைய எழுதுகோல் ஒரு நாளும் சென்றதில்லை. இவருடைய எழுதுகோல் பாட்டாளி மக்களை நோக்கியே இருந்தது. அனைவரும் இவரைப் பாட்டாளி கவிஞர் என்று பாராட்டி மகிழ்ந்தார்கள். ‘விராயி’ காப்பியத்தின் முன்னுரையில்,

“மக்களுக்காக, மக்கள் உயரமக்கள் காலத்துக் கதை

எழுதுங்கள். உலகம் முழுவதும் உருவாகிக் கொண்டுவரும்

உழைக்கும் இனத்தின் கூட்டு முன்னணிக்கு உங்கள் எழுத்து

உறுதுணையாகட்டும்”

என்று கூறுகிறார் (Sanjeevi, 2016). தான் ஏற்றுக் கொண்ட பொதுவுடைமைக் கொள்கையைப் பரப்புவதற்கென்றே ‘நிலைபெற்றசிலை’ என்ற காவியத்தைப் படைத்துள்ளார் தமிழ்ஒளி. அந்தக் காப்பியத்துள் மருதவாணன் என்ற பாத்திரத்தைப் படைத்து அதன் மூலம் ‘மறுமலர்ச்சிக் கழகம்’ என்ற அமைப்பை உருவாக்குகிறார். ‘பாழ்செய்யும் தனிஉடைமை வீழ்க!’ என்பதே அந்தக் கழகத்தின் குறிக்கோளாக இருக்கிறது.

“அயராமல் உழைத்தீரே - நெய்துநெய்து

ஆடைகளைக் குவித்தீரே-நீர் அடைந்த

பயன் என்ன? பட்டினியால் வாடுகின்றீர்

பசையிழந்த உம்மனைவி மக்களெல்லாம்

கையாலே மானத்தை மறைக்கின்றார்கள்”

தொழிலாளர் கூட்டத்தில் மருதவாணன் பேசிய பேச்சு பாட்டாளிகளுக்கு எழுச்சியைத் தருவதாக அமைகிறது (Sanjeevi, 2018).

மேலும் மருதவாணன் பாட்டாளி மக்களைப் பார்த்துப் பேசும் பேச்சுதமிழ்த் தேசியத்தைக் கட்டமைக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

“இன்றே இக்கழகத்தில் சேர்வீர்-தொண்டில்

இசைந்திடுவீர் தமிழர் இனம் தழைக்கச் செய்வீர்!

ஒன்றே இந்நாட்டிலுள்ள தமிழரெல்லாம்

ஒன்பது கோடிப்பிரிவை ஒப்பீடாதீர்”

இடதுசாரி இயக்கப் படைப்பாளர்கள் சாதியத்தையும்ää தேசியத்தையும் நேரடியாகப் பேசாத சூழலில் தமிழொளி நேரடியாகப் பேசியிருப்பது பிற பொதுவுடைமைபடைப்பாளிகளிடமிருந்து இவர் முற்றிலும் வேறுபட்டவர் என்பதைக் காணமுடிகிறது (Sanjeevi, 2018).

தமிழிலக்கிய வரலாற்றில் இடதுசாரி இயக்கப் படைப்புகளில் இவருக்கு என்று ஒரு தனித்த இடமுண்டு, இதனைப் பற்றி வீ. அரசு, “கவிஞர் தமிழொளி 1945 முதல் 1953 முடிய இடதுசாரி இயக்கத்தில் செயல்பட்டமையை அறியமுடிகிறது. இக்காலச் சூழலில் தமிழொளியின் படைப்புகள் அச்சாகி வெளிவந்தன. அவை தமிழக இடதுசாரி இயக்க வரலாற்றின் பதிவுகளாக அமைந்திருப்பதைக் காணமுடிகிறது” என்கிறார் (Sanjeevi, 2017).

## முடிவுரை

இடதுசாரி இயக்கக் கொள்கையைத் தமது படைப்புகளில் முதலும் முடிவுமாக பதிவுசெய்தவர். ஒடுக்கப்பட்ட மக்களைச் சாதி ரீதியாக மட்டுமின்றி வர்க்கரீதியாக அணுகும் போக்கை அவரது பல படைப்புகளில் பார்க்கமுடிகிறது. சமத்துவத்தையும் சுயமரியாதையையும் முன்வைக்கும் படைப்பாளியாகத் தமிழ்ஒளியை அறியமுடிகிறது. உழைப்பாளிகளின் பெருமையை இவரது பல கவிதைகள் பேசுகிறது. மொத்தத்தில் தமிழ் ஒளியின் கவிதைகள் அனைத்திலும் அடிநாதமாக பொதுவுடைமைச் சிந்தனை செயல்பட்டுக் கொண்டுருப்பதை அறிய முடிகிறது.

## References

Sanjeevi, S.T. (2015) Tamil Oli Ninaivaga Sila Pathivukal, Pugal Puthagalayam, Chennai, India

Sanjeevi, S.T. (2017) Tamil Arignar Parvaiyil Tamil Oli, Pugal Puthagalayam, Chennai, India

Sanjeevi, S.T. (2018) Kavignar Tamil Oli Kavithaigal, Pugal Puthagalayam, Chennai, India

Tamil Oli, (2016) Kavignar Tamil Oli Kaviyangal, Kavignar Tamil Oli Nootrandu Vilakulu veliyedu, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License